# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

CASE NO. CC - 197/2017

Deposition of Witness for PW-1(Cross)

Date 24.02.2026

பெயர் மாயக்கண்ணு

த/பெ. முத்தையா

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 24rd February 2026.

---

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை:-**

1) எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால், ஆசிரியராக அரந்தாங்கியில் வேலை செய்கிறார். எந்த பள்ளியில் வேலை செய்கிறார் என்றால், எனக்கு தெரியாது. எதிரிக்கு எத்தனை வயது இருக்கும் என்றால், 45 வயது இருக்கும். எதிரி எனக்கு எத்தனை வருடங்களாக எனக்கு பழக்கம் என்றால், சுமார் 2-வருடங்களாக பழக்கம். எதிரி எப்படி எனக்கு பழக்கம் என்றால், ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் போது பழக்கம். நான் என்ன படித்துள்ளேன் என்றால், 11-ம் வகுப்பு படித்துள்ளேன். நான் எந்த ஊரில் படித்தேன் என்றால், சிவகங்கையில் படித்தேன். எனக்கு எந்த வங்கியில் சேமிப்பு கணக்கு உள்ளது என்றால், Bank of India-வில் கணக்கு உள்ளது. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால், ரியல் எஸ்டேட், விவசாயம், பாத்திரங்களை வாடகைக்கு கொடுத்து வருகிறேன். நான் வருமானவரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. நான் எந்த வருமானத்தின் அடிப்படையில் ரூ.7,00,000/- எதிரிக்கு கடனாக கொடுத்தேன் என்றால் ரியல் எஸ்டேட், விவசாயம், பாத்திரங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் கிடைத்த வருமானத்தில் கொடுத்தேன். நான் எதற்காக எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால், இடம் வாங்குவதற்காக பணம் கேட்டார். மேற்படி தகவலை எனது மனுவில் கூறியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்றால் எதிரி தான் பூர்த்தி செய்தார். காசோலையில் உள்ள எதிரியின் கையெழுத்து மற்றும் தொகை நிரப்பப்பட்ட கையெழுத்துக்கள் வெவ்வேறாக உள்ளது என்றால் எதிரி தான் பூர்த்தி செய்து கொடுத்தார். காசோலையை பூர்த்தி செய்து கொண்டுவந்தாரா என்றால் என் முன்னிலையில் தான் பூர்த்தி செய்தார்.

எதிரி நான் நான் பணம் கொடுக்கும் போது வேறுயாராவது இருந்தார்களா என்றால் இல்லை. எதிரிக்கு நான் பணம் கொடுத்த விவரம் வேறுயாருக்காவது தெரியுமா என்றால் தெரியாது. நான் எதிரிக்கு ரூ.7,00,000/- மொத்தமாக கொடுத்தேனா என்றால், மொத்தமாக கொடுத்தேன். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எந்த தேதியில் காசோலையை வசூலுக்காக வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால் 08.09.2017-ம் தேதி தாக்கல் செய்தேன். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்று கொண்டாரா என்றால், பெற்று கொண்டார். அந்த விவரத்தை மனுவில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளதில் அது Intimation served-என காட்டப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அதற்கான விளக்கம் தெரியாது. நான் காலவரையறையை தாண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரி எனக்கு யார் என்று தெரியாது என்றும், நான் கடன் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு கிடைத்த காசோலையை வைத்து எதிரி மீது பொய்யாக புகார்மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலை நானே பூர்த்தி செய்துவிட்டு எதிரி பூர்த்தி செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிர்தரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.